பத்திரிகை வெளியீடு

செய்தி தொடர்பு துறை: மைய அலுவலகம்
S.B.S. மார்க், மும்பை 400 001
தொலைபேசி: 91 22 2266 0502
நகலனுப்பி: 91 22 2270 3279

இந்திய ரிசர்வ் வங்கி
www.rbi.org.in
www.rbi.org.in /hindi
e-mail: helpprd@rbi.org.in

**நவம்பர் 5, 2007**

## இந்திய ரிசர்வ் வங்கி வெளியிடும் 'A' என்ற ஆங்கில எழுத்துடன் கூடிய ரூ.10 மதிப்பு இலக்க வங்கி நோட்டுகள்

ஆளுநர் டாக்டர் Y.V. ரெட்டி கையொப்பம் கொண்ட மகாத்மா காந்தி வரிசை நோட்டுகளில் எண்கள் வரிசையில் உள்பொதித்து அச்சடிக்கப்படும் 'A' என்ற ஆங்கில எழுத்துடன் கூடிய ரூ.10 மதிப்பு இலக்க வங்கி நோட்டுகள் கூடுதலான/புதிய பாதுகாப்பு அம்சங்களுடன் விரைவில் இந்திய ரிசர்வ் வங்கியால் வெளியிடப்படும். புதிதாக சேர்க்கப்பட்ட இந்த எழுத்தைத் தவிர வேறு எந்த மாற்றமுமின்றி, முன்பு கூடுதலான/புதிய பாதுகாப்பு அம்சங்களுடன் ஏப்ரல் 27, 2006ல் வெளியிடப்பட்ட மாகாத்மா காந்தி வரிசை நோட்டுகளை எல்லாவிதத்திலும் ஒத்ததாக இவை இருக்கும். இதற்கு முன் ரிசர்வ் வங்கி வெளியிட்ட அனைத்து ரூ.10 மதிப்பு இலக்க வங்கி நோட்டுகளும் தொடர்ந்து சட்டப்படி செல்லத்தக்கவையே.

அஜித் பிரசாத்
மேலாளர்

**பத்திரிகை வெளியீடு: 2007-2008/619**